Registerde as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 19 (04 - 11 - 1993) வியாழக்கிழமை ஓசை 259

யாழ்ப்பாணம்

## அஞ்சலட்டை போராட்டம் எதிர்க்கட்சிகள் நடத்த முடிவு!

அரசின் கொள்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் பத்து லட்சம் தபால் அட்டைகளை அனுப்பிவைக்கும் போராட்ட மொன்று ஆரம்பமாகவுள்ளது. முதல் தொகுதி வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. வரவு-செலவு திட்டம் வரும் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. வெலிமடை நகரில் 4000 க்கும் அதிகமானோர் அஞ்சலட்டையில் கையெழுத்து வைத்துள்ளதாக பத்துலட்சம் தபால் அட்டைப் போராட்டத்தின் அமைப்பாளரும் ஹம்பாந்தோட்டை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்தா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தபால் அட்டையில் கையெழுத்து (4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் பலர் கைது!

## மாணவர் மத்தியில் பெரும் பீதி

(கொழும்பு)

**கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல தமிழ் மாணவர்கள் அண்மையில் சிறிலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் இதைத் தொடர்ந்து பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை மாணவர் கைதுசெய்யப்படுவதை உடன் நிறுத்துமாறு கொழும்பு பல்கலைக்கழக மாணவர் சமமேளனம் அரசிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.**

அண்மைக்காலத்தில் நடைபெற்ற சுற்றிவளைப்புகள் மற்றும் வீதித் தேடுதல்களின் போது இவ்வாறு பல்கலைக் கழக மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. கைதான தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த கணிசமான மாணவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்விபயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொழுமபு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்களை வழிமறித்த பொலிசார் பத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களை கைது செய்துகொண்டு சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீர் என்று இந்த இடத்திற்கு விரைந்து வந்த பொலிசார் பல வாகனங்களை தமது சோதனைக்கு உட்படுத்தினர். சந்தேகத்தின் பேரில் பத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களை கைது செய்தனர்.

விசாரணையின் பின்னர் நிரபராதி எனக் காணப்பட்டால் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று இக்கைது நடவடிக்கையை அடுத்து பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்கா பிரதமருக்கு இப்படியும் ஒரு பெருமிதம்

உலக நாடுகள் சிறிலங்காவின் முன்மாதிரியை பின்பற்றுகிறார்கள் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

'பயங்கரவாதத்தை' ஒழிப்பதில் உலகில் 'பயங்கரவாதம்' நிலைகொண்டுள்ள நாடுகளில் சிறிலங்காவின் முன்மாதரியை பின்பற்றுகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மகாவலி பிரிவில் மாதுறு ஓயா குடியேற்றத் திட்டத்தில் உள்ள 'சிங்கபுர' இராணுவ முகாமில் இராணுவத்தினர் மத்தியில் குறிப்பிட்டார்.

அடுத்தஆண்டு கிழக்குமாகாணத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலுக்கு உகந்த சூழ்நிலை உருவாகி வருகிறது. இதற்காக பாதுகாப்பு படையினருக்கு நான் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். பாதுகாப்பு படையினர் பிரயோகித்த போர் யுக்திகளால் 'பயங்கரவாதப்' பிரச்சினை படிப்படியாக ஒழிககப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

## பழுதாகிய புக்காரா விமானம் திருத்தவேலை ஆரம்பம்

### பலாலியில் நிபுணர்கள் குழு

(கொழும்பு)

பழுதடைந்த நிலையில் நிறுத்தப்பட்டுள்ள புக்காரா விமானங்கள் தற்போது ஆர்ஜன்டீனா தொழில்நுட்ப வியலாளர்களால் திருத்தப்பட்டு வருவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

'புக்காரா- ஐஏ 58ஏ' என அழைக்கப்படும இந்த விமானங்களை பரிசோதனையிடவும், பழுதுபார்க்கவும் ஆர்ஜன்டீனாவின் பப்ரிகா ஆர்ஜன் டீனா டி மற்றீரியல்ஸ் ஏயிரோ ஸ்பெஷல்ஸ் (Fama) என்ற நிறுவனத்திலிருந்து மூன்றுபேர்கொண்ட தொழில் நுட்பவியலாளர் குழு இலங்கை வந்து சோந்தது இவர்கள் தற்போது பலாலி விமான தளத்தில் புக்காரா விமானம் ஒன்றை பழுதுபார்த்து வருகின்றனர் எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

பழுதுபார்க்கப்படும் விமா ...

11மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு புக்காரா விமானங்களில் மூன்று விமானங்கள் பழுதடைந்த நிலையில் தற்போது உள்ளமை தெரிந்ததே.

வான் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரி கருத்து தெரிவிக்கையில் விமானங்கள் பழுது பார்க்கப்பட்டதும் அவை தொழிற்படக் கூடியதாக இருக்கும் என்றார். அண்மையில் மேற்கொண்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட இவ் விமானங்களில் சிக்கலான தொழில்நுட்ப பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## கொக்கட்டிச் சோலையில் புதிய ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச் சோலையில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையைஇராணுவத்தினர் ஆரம்பித்துளளதாக தெரிவிக்கபபடுகிறது. இவ் இராணுவ நடவடிககைக்கு 'வட்டமிடுதல்' என பெயரிடப்பட்டுள்ளதாகவும் இது கிழக்கு பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அங்கபமன, பிரிகேடியர் ஜனக பெரேரா ஆகியோரின் கீழ் நடைபெற்று வருவதாகவும் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச் சோலையில் பல கிராமங்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து பெறும் நோக்குடன் இநத இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு



## யாழ். செல்லும்போது மரண பயத்தில் இருந்தோம்

### லங்காதீப செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

''நாம் திருக்கோணமலையில் ஏறியநரோமாகப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாக சைரன் ஒலியை எழுப்பியபோது நாம் எமது வீட்டைப் பற்றி ... வந்துஇறக்கியவருமான சுசிரா ஆகியோர்களையும் ஒருகணம் எண்ணிக்கொண்டோம். நாம் புறப்படுவதற்குமுன் அவர்கள் எம்மை அணைத்து கடவுள் உங்களைப் பாதுகாப்பாராக ... டம் வினாவியபோது நான் எனது குழந்தையை நினைத்துக்கொண்டேன் என்று அவர் கூறும்போதே அவரது கண்ணோரத்தில் கண்ணீர்த்துளி வீழ்ந்த...''

பழுதடைந்த நிலையில் நிறுத்தப்பட்டுள்ள புக்காரா விமானங்கள் தற்போது ஆர்ஜன்டீனா தொழில்நுட்ப வியலாளர்களால் திருத்தப்பட்டு வருவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

'புக்காரா- ஐஏ 58ஏ' என அழைக்கப்படும இந்த விமானங்களை பரிசோதனையிடவும், பழுதுபார்க்கவும் ஆர்ஜன்டீனாவின் பப்ரிகா ஆர்ஜன் டீனா டி மற்றீரியல்ஸ் ஏயிரோ ஸ்பெஷல்ஸ் (Fama) என்ற நிறுவனத்திலிருந்து மூன்றுபேர்கொண்ட தொழில் நுட்பவியலாளர் குழு இலங்கை வந்து சேர்ந்தது இவர்கள் தற்போது பலாலி விமான தளத்தில் புக்காரா விமானம் ஒன்றை பழுதுபார்த்து வருகின்றனர் எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

பழுதுபார்க்கப்படும் விமானங்களில் ஒன்று அடுத்த மூன்று வாரங்களுக்குள் நடவடிக்கையில் இறங்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

டொலர் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு புக்காரா விமானங்களில் மூன்று விமானங்கள் பழுதடைந்த நிலையில் தற்போது உள்ளமை தெரிந்ததே.

வான் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரி கருத்து தெரிவிக்கையில் விமானங்கள் அவை தொழிற்படக் கூடியதாக இருக்கும் என்றார். அண்மையில் மேற்கொண்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட இவ் விமானங்களில் சிக்கலான தொழில்நுட்ப பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொக்கட்டிச் சோலையில் புதிய ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச் சோலையில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையைஇராணுவத்தினர் ஆரம்பித்துளளதாக தெரிவிக்கபபடுகிறது. இவ் இராணுவ நடவடிககைக்கு 'வட்டமிடுதல்' என பெயரிடப்பட்டுள்ளதாகவும் இது கிழக்கு பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அங்கபமன, பிரிகேடியர் ஜனக பெரேரா ஆகியோரின் கீழ் நடைபெற்று வருவதாகவும் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச் சோலையில் பல கிராமங்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து பெறும் நோக்குடன் இநத இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## கிளாலிப்பகுதி நோக்கி இராணுவம் ஷெல் வீச்சு

(தென்மராட்சி)

கிளாலி அல்லிப்பளை கடற்கரையோரப் பகுதியைநோக்கி நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது அதேவேளை சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமான உலங்குவானூர்தி ஒன்றும் கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதேவேளை ஆலங்கேணி பகுதிகளிலும் உலங்குவானூர்தி தாக்குதலும் ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல்தாக்குதலும் நடாத்தப்பட்டது முகாமில் இருந்து கடல்பிரதேசம் எங்கும் பரா வெளிச்சம் பாய்ச்சப்பட்டது.

இதேவேளை இத்தாக்குதல் இடம்பெற்று சற்று நேரத்தில் கடல் பரப்பில் கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையே பெரும் மோதல் ஒன்று ஏற்பட்டதாக தெரியவருகின்றது எனினும் படகுசேவை இடம்பெற்றது.

## இன்று படகுச்சேவை

**இளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் எதிர் வரும் 6-ம் திகதியும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.**

மற்றும் வீதித் தேடுதல்களின் போது இவ்வாறு பல்கலைக் கழக மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. கைதான தமிழ் மாணவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த கணிசமான மாணவர்கள்

இதேவேளை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்களை வழிமறித்த பொலிசார் பத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களை கைது

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீர் என்று இந்த இடத்திற்கு விரைந்து வந்த பொலிசார் பல வாகனங்களை தமது சோதனைக்கு உட்படுத்தினர். சந்தேகத்தின் பேரில் பத்திற்கும் மேற்பட்ட

நிரபராதி எனக் காணப்பட்டால் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று இக் கைது நடவடிக்கையை அடுத்து பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். செல்லும்போது மரண பயத்தில் இருந்தோம்

## லங்காதீப செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

''நாம் திருக்கோணமலையில் ஏறியநரோமாகப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாக சைரன் ஒலியை எழுப்பியபோது நாம் எமது வீட்டைப் பற்றி எண்ணிக்கொண்டோம் எமது சகாக்களான குணசின்கா மற்றும் அலுவலக சாரதியும் எம்மைசிருமலையில் கொண்டு வந்துஇறக்கியவருமான சுசிரா ஆகியோர்களையும் ஒருகணம் எண்ணிக்கொண்டோம். நாம் புறப்படுவதற்குமுன் அவர்கள் எம்மை அணைத்து கடவுள் உங்களைப் பாதுகாப்பாராக என்று கூறினர். எமது துதியும் அதுவே துஷாரா குணரட்ன ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார் ஏன் என அவரிடம் வினாவியபோது நான் எனது குழந்தையை நினைத்துக்கொண்டேன் என்று அவர் கூறும்போதே அவரது கண்ணோரத்தில் கண்ணீர்த்துளி வீழ்ந்தது.''

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய சிங்கள தினசரியான 'லங்கா

(4-ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன் மூர்த்தி



லெப். லோகேஸ் [இன்பன்]

திருமலை மாவட்டம் செல்வநாயக புரத்தில் கடந்த திங்களன்று இரவு 8.45 மணியளவில் ஏற்பட்ட திடீர் மோதலில் இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் மூர்த்தி (வேலாயுதம் சந்திரகுமார், 144 | 59, மருத்துவ மனை வீதி திருமலை) லெப்டினன்ட் லோகேஸ் | இன்பன் (சுோபாலபிள்ளை ரஜீநதிரன், 25 உவர் மலை மெக்கெய்சர் வீதி திருமலை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

காங்கேசன்சீமெந்து தொழிற்சாலையிலிருந்து

# பொருள்கள கடத்த முயன்ற இராணுவ அதிகாரிகள் கைது

வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து மோட்டார் உதிரிப் பாகங்கள், வாசன இயந்திரங்கள், மின்சாரக் சருவிகள் என்பவற்றை கொழும்பிற்கு கொண்டுசெல்ல முயன்ற இரண்டு இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25இலட்சம் ரூபா பெறுமதியான இப் பொருள்களை இராணுவ உபகரணங்கள் எனக்கூறி இவற்றை கொழும்பிற்குக் கொண்டு சென்று அங்கு விற்பனை செய்ய இவர்கள் திட்டமிட்டிருந்தனராம்

இவற்றில காங்கேசன்துறை சீமெந்து ஆலை இயந்திரப் பொருள்களும் அடங்குகின்றன. இவற்றை ஜீப்வண்டியொன்றில் ஏற்றிக் கொண்டிருந்த போதே இவ்மேஜர், கப்டன் தரத்திலுள்ள இரண்டு இராணுவ அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர்

இவர்கள் மீதான விசாரணை தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது

# பொலிஸ்மா அதிபராக உடுகம்பொல நியமனம்?

(கொழும்பு)

அடுத்த பொலிஸ்மா அதிபராக பிரேமதாசா உடுகம்பொல நியமிக்கப்படவுள்ளதாக அரச உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போதைய பொலிஸ்மா அதிபர் இம் மாதத்துடன் ஓய்வுபெற இருப்பதனால் இவரின இடத்திற்கு முன்னர் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த பிரேமதாசா உடுகம்பொல நியமிக்கப்படலாம் என அவ் அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'ராவய' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது

இவர் முன்னர் ஜே வி பி இனர் காலத்தில் பெரும் சர்ச்சைக்குரியவராகஇருந்ததுடன் பிரேமதாசா தொடர்பாக சத்தியக் கடதாசி சமர்ப்பித்ததை அடுத்து பொலிசாரால் தேடப்பட்டு வந்தமையும் பின்னர் டி பி. விஜேதுங்க வினால் துறைமுக அதிகார ச ப உப தலைவராக நியமிக்

(4 ஆம் பக்கம் பார்கக )

## கிட்டு பயணம் செய்த கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணை நடத்தி வரும் இந்திய சிறப்பு புலனாய்வு துறை கடந்த ஜனவரி மாதம் வங்கக்கடலில் சென்னைக்கு அப்பால் கடலில்மூழ்கிய எம். வி அகத் என்ற விடுதலைப்புலிகளின் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

க லின் அடித்களத்தில் கிடக்கும் இக்கப்பலில்இருந்து 9 நாட்கள் கடின முயற்சி எடுத்து சான்றுகள்வெளிக்கொண்டுவரப்பட்டதாகவும் அதில்

[4ஆம் பக்கம் பார்க்க]

# பல்கலை அனுமதி முறை ஆராய 8 பேர்கொண்ட குழு

## இம்மாதம் அறிக்கை சமர்ப்பிக்கும்

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள புதிய குழு எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் இதன் சிபார்சை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சை ஆணையாளர் உட்பட மொத்தம் எட்டுப் பேர் இக்குழுவில் அடங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சிஸ்ஸி டி சில்வா தான் இதன் தலைவர், உப தலைவராக பேராசிரியர் நாளினி ரத்தின சிங்க மற்றும் பேராசிரியர் ஜே. எம். குணதாச (உப வேந்தர், பேராதனை பல்கலைக் கழகம்), பேராசிரியர் ஆர். எம். டி, பொன்சேகா (கொழும்பு பல்கலைக்கழகம்), பேராசிரியர் கே. டி. அருள் பிரகாசம் (கொழும்பு பல்கலைக் கழகம்), ஆதர் வெதமுல்ல [பரீட்சை ஆணையாளர்), ஏ. பி, குணரட்ன (ஆனந்த கல்லூரி அதிபர்) ஜனாபா ஜெகீமா இஸ்மாயில் (முஸ்லிம் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர்) ஆகியோர் இக்குழுவில் உள்ளனர்,

இதேவேளை திறமை அடிப்படையிலேயே மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இது சில சமயம் சில மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகையால் தற்போதைய பல்கலைக் கழக அனுமதிக்கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குண்டுபட்டு குடல் சிதறி
உன்பிள்ளை வீதியில் கிடக்கிறாள்
குருதிச் சேற்றில் உன்நிலம் கிடக்கிறது
அடுப்பெரிக்க விறகு தேடும் தமிழனே
வாடா எதிரியை எரிப்போம்

## வரி விளம்பரம்

**வினாத்தாள் (ஆண்டு 3,4)**

07-11-93 ஞாயிறு வெளியிடவிருந்த ஆண்டு 3, ஆண்டு 4, புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 06-11-93 சனி வெளியிடப்படும் ஏனைய நிறுவனங்களும் பாடசாலைகளும் தனிப்பட்டவர்களும் 06-11-93 சனி பெற்றுக் கொள்ளலாம். புதியகல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6460)


### சேவை நலம் பாராட்டு

(வடமராட்சி)

பருத்தித்துறை கொத்தணி அதிபரும் ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபருமான திரு. பொன். பாலசிங்கம் அவர்கள் ஓய்வு பெற்றதையடுத்து கல்லூரி மாணவர்கள் சேவை நலம் பாராட்டு வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவர் முப்பத்திரண்டு வருடகால ஆசிரியர் சேவையை முடித்து ஓய்வு பெற்றவர் ஹாட்லிக் கல்லூரியின் மாணவனாகவும், ஆசிரியராகவும் உப-அதிபராகவும் அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் இருந்து இவர் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (யோ)

### மழையினால் பாதிப்பு

(மானிப்பாய்)

தொடர்ச்சியாகவும், விட்டு விட்டு பெய்கின்ற அடைமழையினாலும் இம்முறை பெரும்போக நெற்பயிர்ச் செய்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. வலிகாமம் தெற்கு, தென்மேற்கு பகுதிகளில் பெரும்பாலான நெல் வயல் காணிகள் வெள்ளத்தினால் மூடுப்பட்டு அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. இம்முறை பெய்த கடும்மழையினால் நவாலி, சங்கரத்தை பகுதி வயல்களில் (காணிகள்) நெல் விதைப்பின் போதே கடும் மழை பெய்ததினால் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. (07)

## பணயக்கைதியாகஇருப்பவர் விடுதலை செய்யப்பட வேண்டும்

– நீதிபதி பணிப்பு

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொலை தொடர்பாக தேடப்படும் ஒருவரை கைது செய்வதற்காக பணயக்கைதியாக பொலிசாரால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் அவரது சகோதரரானசெல்லையா அன்னராசா என்பவர் மீது எதிர்வரும் எட்டாம்திகதிக்கு முன்னர் வழக்கு தாக்கல்செய்யப்படாவிட்டால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது

ஆனைக்கோட்டை வடக்கு பகுதியைச் சேர்ந்த கோதை நாயகி என்பவர் தமது கணவரான செல்லையா அன்னராசாவை விடுதலை செய்யக் கோரி தாக்கல் செய்த வழக்கை விசாரித்த போதே நீதிபதி இவ் உத்தரவை பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

### மாணவர் முத்திரைபொருள்கள் வழங்கப்படவில்லை

''காரைநகர் ப.நோ.கூ.சங்கத்திற்குரிய மாணவ முத்திரை விநியோகப் பட்டியல் சித்திரை 1993, ஆனி 1993, ஆடி 1993 ஆகியவை இதுவரையிலும் சங்கத்திற்கு கிடைக்காதபடியால் பொருள்கள் வழங்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர் இன்னும் திரும்ப வரவில்லை

(குருநகர்)

கடந்த மாதம் 29 ஆம்திகதி வெள்ளி இரவு பூநகரி பெரிய வேலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் கடல் தொழிலாளர்கள் மீது நடத்திய தாக்குதலை அடுத்து திரும்பி வராத மீனவர்கள் நேற்று வரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை மூதூரைச்சேர்ந்த லோறன்ஸ் அல்லது ஜெயச்சந்திரன் குருஸ் என்னும் மீனவர் குருநகர் மீனவர்களுடன் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்கா இராணுவம் நடத்திய தாக்குதல் நடவடிக்கையை அடுத்துக்காணாமல் போயிருந்தது தெரிந்ததே.

இவரது உறவினர்கள் இங் இல்லாத காரணத்தால் அவரைப் பற்றிய மேலதிக விபரங்களையும், அவரது மீட்சிக்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் உதவியை நாடும் முயற்சிகளும் தடைப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (21)


## தலைமைக் காரியாலய முகவரி மாற்றமும், பெயர் மாற்றமும்

எமது சங்கத்தின் பெயர் ''தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்'' (மட்டுப்படுத்தப்பட்டது) Tellippalai Palm Development Co-op. Society (Ltd) என மாற்றப்பட்டுள்ளது என்பதுடன் இப் பெயருக்கே இனிமேல் தொடர்பு கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்வதுடன் எமது சங்கத் தலைமைக் காரியாலயம் 'ஆனந்தா வீதி மானிப்பாய்' எனும் முகவரியில் இயங்குகிறது என்பதையும் தெரியப் படுத்துகின்றேன்.

கூட்டுறவு சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்,

(சி-7836)


11 வயது சிறுமிமீது


## இளைப்பாறிய பொலிஸ் பாலியல் வன்முறை

(கொழும்பு)

இளைப்பாறிய பொலிஸ் சுப்பிரின்டென் 11 வயதுப் பெண் குழந்தைமீது பாலியல் வன்முறை பிரயோகித்தார் என்று சாட்டப்பட்ட குற்றச்சாட்டை வாபஸ் பெற்றது தொடர்பாக கொழும்பு - 2 பெண்கள் சம்மேளனம் கண்டனம் தெரிவித்துள்ளது.

11 வயதுப் பெண் குழந்தையை பணிப்பெண்ணாக வைத்திருந்த இந்த இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி அந்தப் பெண்மீது பலமுறை பாலியல் வன்முறை பிரயோகித்ததாக பெண்கள் சம்மேளனச் செயலாளர் சந்தானி ஜெயசிங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதோடு, பெண்களின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் சட்டங்களுக்கு எதிராகப் பெண்கள் குரலெழுப்ப வேண்டும் என்றும் கோரியுள்ளார்.


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் பேபி**

கந்தையா பஞ்சலிங்கம்
(களபூமி, காரைநகர்)

மலர்வு: 07. 04. 1972
வீரச்சாவு: 21. 10. 1991

திதி: 04. 11. 1993

பாசமகனே பஞ்சலிங்கம்
நேசமுடன் தினமும் உன் நினைவுகள்
தேசத்துக்காக தோற்றிய லிங்கன்
தானைத் தலைவன் தம்பியின் அணியில்
வீறுநடை பயின்ற வீரப்புலி பேபி
வன்னி மண்ணில் வலிமை பெற்றவன்
தோளை கொடுத்து துணிந்து நின்றவன்
வலக்கை சோர்ந்தும் துவக்கை தூக்கினான்
வலம்புரி நிகழ்வில் வலியப் போனவன்
கூலிப்படையை குறிவைத்து நின்றான்
பட்டப்பகலில் வெட்ட வெளியில்
பண்ணை அதனில் பாதம் பதித்தவன்
மண்ணை மீட்டு மாவீரன் ஆனான்.

தற்போதைய முகவரி
[illegible]
– குடும்பத்தினர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1994

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 டிசம்பர் 15-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

01. எழுதுபொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல்அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/பொருத்துதல்
07. கட்டடங்கள்/கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாகப் பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் பொருத்துதல்

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வழங்கல்கள்/சேவைகள் - 1994'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1994

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 டிசம்பர் 15-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

01. எழுதுபொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல்அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகலவகை ஹார்ட்வெயார் பெயின்டுகள், வார்னிஷ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்
12. மரம்
13. கட்டடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும் மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரிப் பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்புச் சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும் பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள் கண்ணாடிப்பொருட்கள் கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:**

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. ஸ்டீல் தளபாடங்களின் திருத்தவேலைகள்
05. மரத்தளபாடங்களுக்கான திருத்தவேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகள் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

**எந்திரவியல் சேவைகள்:**

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும் திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/பொருத்துதல்
07. கட்டடங்கள்/கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாகப் பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் பொருத்துதல்

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வழங்கல்கள்/சேவைகள் - 1994'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்குப் பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
02. பெயரும் விலாசமும்
03. தொலைபேசி இலக்கம்
04. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
05. வியாபாரத்தின் தன்மை
06. வங்கியாளர்களின் பெயர்
07. கிடைக்கக்கூடிய கடன்வசதிகள்
08. ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம் (3ற்கு மட்டும்)

குறிப்பு:-

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.
எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவார்.

அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவுசெய்துள்ளவர்கள். (பதிவுப்புத்தகத்தின் போட்டோப்பிரதி/அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி/வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7இக்கு மட்டும்) தருக.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

(சி-7780)

---

## லெப்டினன்ட் பேபி

கந்தையா பஞ்சலிங்கம்
(களபூமி, காரைநகர்)

மலர்வு: 07. 04. 1972
வீரச்சாவு: 21. 10. 1991

திதி: 04. 11. 1993

பாசமகனே பஞ்சலிங்கம்
நேசமுடன் தினமும் உன் நினைவுகள்
தேசத்துக்காக தோற்றிய லிங்கன்
தானைத் தலைவன் தம்பியின் அணியில்
வீறுநடை பயின்ற வீரப்புலி பேபி
வன்னி மண்ணில் வலிமை பெற்றவன்
தோளை கொடுத்து துணிந்து நின்றவன்
வலக்கை சோர்ந்தும் துவக்கை தூக்கினான்
வலம்புரி நிகழ்வில் வலியப் போனவன்
கூலிப்படையை குறிவைத்து நின்றான்
பட்டப்பகலில் வெட்ட வெளியில்
பண்ணை அதனில் பாதம் பதித்தவன்
மண்ணை மீட்டு மாவீரன் ஆனான்.

தற்போதைய முகவரி
கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

(6459)

**- குடும்பத்தினர்**

---

## நினைவு கூருகின்றோம்;..

## 1993- 11- 04

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் காரைநகர், களபூமி, வீமன்காமம், கோண்டாவில் பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தாய், தந்தை மூன்று பிள்ளைகள் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 12 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு பச்சனூர் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது உதவியாளர்-

**காவிராஜா**

யாழ் - இணுவில் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**கனகசபை தனபாலசிங்கம்** (காங்கேசன்துறை - யாழ்)

புங்குடுதீவில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தைச் சேர்ந்த மூன்று கடற்றொழிலாளர்கள்.

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம், தச்சன்காடு சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தாக்குதலில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய-

**ரெபேக்கா** (வனிதா பொன்னையா - தம்பகாமம்-பளை)

**பபித்தா** (பாலசாந்தினி பாலசிங்கம் - குப்பிளான் தெற்கு, ஏழாலை - யாழ்)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மறவன்** (சிங்கராசா சிறிகாந்தரூபன்-முல்லைத்தீவு)

திருமலை, நெடுங்கேணிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

**லெப். கனகு** (தியாகராசா கோணேஸ்வரன் - மேன்காமம், கிளிவெட்டி - திருமலை)

**இலட்சுமணன்** (தில்லையம்பலம் சிவராசா - கங்குவேலி மூதூர் - திருமலை)

**கணேஸ்** (டேவிட்சில்வா விக்னேஸ்வரன் - தம்பலகமம் - திருமலை)

மன்னார் விடத்தல்தீவுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

[சி-7833]

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

உடம்பை வளைப்பது சுலபம். ஆனால்.
மன உறுதியை வளைப்பது கடினம்.

- சீனப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# நிரந்தர பகைமைக்கு வழி கோலுகிறார்

தமிழ் மக்கள் சிங்கள மக்களை எப்பொழுதும் எதிரிகளாகப் பார்க்கவுமில்லை. சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவும் இல்லை அவர்கள் போராடுவேது தமது உரிமைக்காகவும், சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து தம்மையும், தமது மண்ணையும் பாதுகாப்பதற்காகவுமே ஆகும்.

இதேவேளை, சிங்கள மக்களிலும் கணிசமான தொகையினர் தமிழ் மக்களை தமது எதிரிகளாகப் பார்க்கவில்லை. ஆனால், சிங்கள மக்களின் ஒரு தொகுதியினர் தமிழ் மக்களை தமது விரோதிகளாகவே பார்க்கின்றனர். காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்களுக்குப் பெரும் துன்பத்தையும் விளைவித்துமுள்ளனர்.

ஆனால், அதற்கும் அம் மக்கள் பொறுப்பில்லை. அரசியல்வாதிகளே தமிழ் மக்களின் மீது சிங்கள மக்களை ஏவி விட்டவர்கள். தவறான விளக்கங்களைக் கொடுத்து தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டி விட்டவர்கள் இதன் மூலம் அரசியல்வாதிகள் ஆதாயம் தேடிக் கொண்டனர். மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தமது காரியத்தைச் சாதித்துக் கொண்டனர்.

இதன் காரணமாக இன்று இனப்பிரச்சினையென்பது சிக்கல் நிறைந்த அளவிற்கு, அதிகமான இரத்தம் சிந்தப்பட்ட பிரச்சினையாக மாறியுள்ளது. ஆயினும், அரசியல்வாதிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதாக இல்லை. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதே அரசியல் வாதிகளின் குறிக்கோளாக இருக்கும் வரை அவர்கள் தமது நிலைப்பாட்டில் இருந்து மாறப்போவதுமில்லை.

ஆனால், எதிர் காலத்திலும் அரசியல்வாதிகளின் இந் நிலைப்பாடு திட்டவட்டமாக நெருக்கடிகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. அரசியல் வாதிகளின் இனவாத நடவடிக்கைகளினால் மோசமான கட்டத்தை அடைந்துள்ள தமிழ், சிங்கள மக்களின் உறவு தொடர்ந்தும் இதே கொள்கை கடைப்பிடிக்கப்படுமானால் மேலும் மோசமடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

இதனை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பியான

# அரசியல் தீர்வில் நம்பிக்கை வைக்க தமிழ் மக்களைத் தூண்டாது

## - ஜனாதிபதியின் பேச்சு பற்றி சிறிமாவோ கருத்து

(கொழும்பு)

அதிகாரங்களை பன்முகப் படுத்தும் நிறுவனங்களாகவே மாகாண சபைகளை அரசாங்கம் உருவாக்கியது. ஆனால், ஜனாதிபதியோ இப்போது அதிகாரம் வழங்கப்படவில்லை என்கிறார். அப்படியானால் அதிகாரங்களை பன்முகப்படுத்தும் அரசியல் தீர்வுகள் பற்றி வடக்கு - கிழக்கு மக்கள் நம்பிக்கை வைப்பார்களா? இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தலைவியும், சிறிலங்கா பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் ஹோவாகெட்ட பேச்சு பற்றி கருத்து வெளியிட்ட திருமதி சிறிமாவோ மேலும் கூறுகையில், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப் படவில்லை என்றால் அதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஏன் செலவிட வேண்டும்? அனைத்துமாகாண சபைளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்திலிருந்த போது தலைவர்கள் இது போன்று பேசவில்லை.

வடமேல் மாகாணம், தென் மாகாணம், மேல்மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களிலும் அதிகாரங்கள் எதிரணியினருக்கு கிடைத்திருப்பதால் அவற்றின் பலத்தை உடைக்கவே இவ்வாறான கருத்துக்கள் இப்போது வெளியிடப் படுகின்றன.

ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த போதே மாகாணசபைகள் உருவாக்கபபட்டன. அப்போது அமைச்சரவையிலிருந்த இன்றைய ஜனாதிபதி இது பற்றி ஏன் ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தார். வேறு கருத்து உடையவர்களுக்கு நாட்டின் அதிகாரங்களைப் பெறுவதற்குள்ள ஜனநாயக உரிமைகளை வழங்க ஐக்கியதேசியக் கட்சி விரும்புவதில்லை என்பதையே ஜனாதிதியின் பேச்சு சுட்டிக்காட்டுகிறது.

மாகாண சபை மசோதாவினால் பெற்றுக் கொண்டுள்ள அதிகாரங்களை அந்த மூன்று மாகாண சபைகளுக்கும் அனுபவிக்க விடுவதில்லை என்ற உட்கருத்தே ஜனாதிபதியின் பேச்சிலிருந்து தெளிவாகிறது.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் எதுவும் இல்லை என்றால் அனைத்து மாகாண சபைகளையும் கலைத்து விடுவதுதானே என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பில் தாக்குதலுக்கு புலிகள் திட்டமாம்

(கொழும்பு)

மிக விரைவில் கொழும்பில் பாரிய தாக்குதல் ஒன்றைமேற் கொள்ள விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்குமாறும் எந்த நேரத்திலும் இத் தாக்குதல் நடைபெறக் கூடும் எனவும் பாதுகாப்பு புலனாய்வு மூலம் இது தெரிய வந்ததாகவும், எனவே பொது மக்களை விழிப்பாக செயல்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியற்ற விடுதிகள் மற்றும் தனியார் வீடுகளில் இருக்கும் வடக்கு - கிழக்குப் பகுதி இளைஞர்கள், யுவதிகள் பற்றி அவதானமாக இருக்குமாறும் புலிகள் தமது தற்கொலைத் தாக்குதலிற்கு வசதியான சமயத்தைஎதிர்பார்ப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் இதற்கு பயன்படுத்தப் பட்டு வருவதாகவும் இவர்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரேமா கொலையின் பின் அரசியல் சூழ்நிலை மாறியது

- ஏ சீ. எஸ் ஹமீத்

(கொழும்பு)

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய அரசியல் சூழ்நிலை தோன்றியிருப்பதாக வெளியுறவு அமைச்சர்

செல்லக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி டி. பி. வீஜேதுங்கவே.

இன்று நாம் காண்கின்ற அரசியல் மாற்றங்களை சில வருடங்களின் முன்னர் எவராலுமே எதிர்வு கூறியிருக்க முடி

# இந் நாட்டில் ஒரு அரசுதான் உள்ளது

# அரசின்கொள்கையை அமுலாக்கவே மாகாணசபைகள் இருக்கின்றன

## - ஹேவா கெட்டவில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டில் பல அரசாங்கங்கள் இல்லை ஒரு அரசாங்கம் மாத்திரமே உள்ளது அரசாங்கத்தினுள் இன்னுமொரு அரசாங்கம் இல்லை என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். சிறந்த முறையில் அரசின் கொள்கைகளை செயல்படுத்தவே மாகாண சபைகளை உருவாக்கினோம். என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவித்தார்.

அண்மையில் ஹேவாஹெட்ட தொகுதியில் பல பொது வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்த பின் தலாத்து ஓயா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் தலைகீழாக நின்று நூறு வருடகாலம் கூச்சல் போட்டாலும் அவர்களால் ஒருபோதும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது யுத்தத்தை பிரகடனப்படுத்தவும், அதனைநிறுத்தி சமாதானத்தை உண்டுபண்ணவும் அரசியல் அமைப்புப்படி ஜனாதிபதி ஒருவராலேயே முடியும். எதிரணியினர் அர்த்தமின்றி கூச்சல்போடுவதால் எதுவும் நடைபெறாது

எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர் வடக்கு கிழக்குப் பயங்கரவாதம் இருக்கிறதே ஒழிய அங்கு இனவாதம் இல்லை.

மாகாண சபைகளின்கடமை மத்திய அரசாங்கத்தின்கொள்கைகளை அமுல் நடத்துவதே ஆகும். மாகாணசபைகள் கொள்கைகளை உருவாக்கும் நிலையங்கள் அல்ல என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். கொள்கைத்திட்டங்களை உருவாக்குவது மத்திய அரசாங்கமே ஆகும். சில மாகாணசபைகள் எமது கட்சிக்கு கிடைக்காது போனாலும் அரசின் தேசிய கொள்கைக்கு இணங்க செயல்பட வேண்டியது மாகாண சபைகளின் கடமையாகும். மாகாணசபைகள் இருப்பது மத்திய அரசாங்கத்துடன் வழக்கு நடத்துவதற்கு அல்ல மத்திய அரசாங்கமும் பாராளுமன்றமும் கொள்கைகளைத் தயாரிக்கின்

வருகின்றோம். கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூர் ஆட்சி மன்றங்களினதும் பிரதேச சபைகளினதும் தேர்தல்களை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

ஜே.வி.பீ. பயங்கரவாதத்தை எவ்வாறு ஒழித்துக் கட்டினோமோ அதேபோன்று எந்த வழியிலேனும் வடக்கு கிழக்கு பிரச்சினையையும் ஒழித்துக்கட்டுவோம்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை ஒழித்துக்கட்டக் கூறுகிறார்கள் ஒழிந்து போங்கள் என்று திட்டுகிறார்கள் சரி யாருக்கு ஆட்சியைக் கொடுப்பது? எம்மிடமிருந்து நரிசளுக்கா கொடுப்பது? ஆட்சிப் பொறுப்பை பாரமெடுக்க யார் இருக்கின்றனர்? இன்றுள்ள பிரச்சினைகளை யாரிடம் ஒப்படைப்பது? இன்று இருபதுக்கும் மேற்பட்டசிறு சிறு பத்திரிகைகள் தோன்றி பௌத்த பிக்குகளையும் அரசியல்வாதிகளையும் தூற்றுகின்றன அதைப்பற்றி நாம் கவலை கொள்ளவில்லை புத்தர்போதனையைப் பின்பற்றி நாம் செயல்படுவோம் என்றும் தெரிவித்தார்.

# காங்கிரசுடன் அரசுக்கு பகைமை ஏற்படுத்த முயற்சி

## - அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

காங்கிரசுக்கும் அரசுக்கும் இடையே பகைமையை உண்டு பண்ண சிலர் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதனை முறியடிப்பதற்கு நாம்எலலோரும் ஒற்றுமையுடன் ஓரே சக்தியாக இருப்பது அவசியம் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விளையாட்டு வைபவம் ஒன்றில் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

தோட்டத்திலுள்ளவர்கள் பரம்பரை பரம்பரையாக தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இப்போது அவர்களுக்கு இல்லை. பல துறைகளிலும் அவர்கள் முன்னேறி வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# அநுராவின் முடிவு குறித்து அவரது சகாக்கள் அதிருப்தி

(கொழும்பு.

அநுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டமை தொடர்பாக சுதந்திரக்கட்சியில் இருக்கும் அநுராவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்துடன் ஏற்கனவே கருத்து முரண்பாடு கொண்டுள்ள 'ஹெல உறுமய' குழுவைச் சேர்ந்த களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்னா இது பற்றிக் கூறுகையில், சுதந்திரக் கட்சியிலிருந்து தான் உடனடியாக வெளியேறக் காரணம் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டார். பேராசிரியர் கமால் கருணாநாயக்

தாஸ நியதபால முதலில் அநுராவுடன் பேச்சு வார்த்தை நடத்துவேன் பின்னர் எனது உணர்வுகளின் அடிப்படையில் முடிவு செய்வேன் எனத் தெரிவித்தார். தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான ஹலீம் இஷாக் சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா விலகியமை துக்ககரமானதே. எனினும் அநுராவுடன் பேசிய பின்னரே தனது டிவு அறிவிக்கப்படும் என்று கூறினார். குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான லயனல் ராஜபக்ஸா கட்சியின் அடுத்த நடவடிக்கைக்காக காத்திருப்பதாகக் கூறினார். அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஸா கூறுகையில், என்ன நிகழ்ந்தாலும் தான் ஒருபோதும் ஐ. தே. கவுடன் சேரப் போவதில்லை எனத்

ஏவி விட்டவர்கள். தவறான விளக்கங்களைக் கொடுத்து தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டி விட்டவர்கள் இதன் மூலம் அரசியல்வாதிகள் ஆதாயம் தேடிக் கொண்டனர். மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தமது காரியத்தைச் சாதித்துக் கொண்டனர்.

இதன் காரணமாக இன்று இனப்பிரச்சினையென்பது சிக்கல் நிறைந்த அளவிற்கு, அதிகமான இரத்தம் சிந்தப்பட்ட பிரச்சினையாக மாறியுள்ளது. ஆயினும், அரசியல்வாதிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதாக இல்லை. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதே அரசியல் வாதிகளின் குறிக்கோளாக இருக்கும் வரை அவர்கள் தமது நிலைப்பாட்டில் இருந்து மாறப்போவதுமில்லை.

ஆனால், எதிர் காலத்திலும் அரசியல்வாதிகளின் இந் நிலைப்பாடு திட்டவட்டமாக நெருக்கடிகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. அரசியல் வாதிகளின் இனவாத நடவடிக்கைகளினால் மோசமான கட்டத்தை அடைந்துள்ள தமிழ், சிங்கள மக்களின் உறவு தொடர்ந்தும் இதே கொள்கை கடைப்பிடிக்கப்படுமானால் மேலும் மோசமடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

இதனை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பியான எஸ். பி. திஸநாயக்கா தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் எனலாம். ''இன்று வடக்கு - கிழக்கில் உள்ளது பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறி ஒரு தேசிய இனப் பிரச்சினையை ஜனாதிபதி மழுங்கடிக்கப் பார்க்கின்றார். இதன்மூலம் தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் நிரந்தர பகைவராக்க அவர் முயல்கின்றார்'' என்பதே அவர் தெரிவித்த கருத்தாகும்.

சுதந்திரக்கட்சியின் கடந்த கால நடவடிக்கைகள் தமிழர் மீதான ஒடுக்கு முறைக்கு எந்தளவு காரணமாக இருந்தது, சுதந்திரக் கட்சியின் இனப் பிரச்சினை குறித்த இன்றைய நிலை என்ன? திஸநாயக்காவின் நோக்கம் என்ன? அவரின் ஏனைய கருத்துக்கள் எவ் வகையானவை? என்பன குறித்துக் கேள்விகள் பல இருப்பினும், அவர் கூறியுள்ளது போன்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் நிரந்தர பகைவர்களாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்பதில் எதுவித தவறும் இல்லை.

அதாவது, ஒரு தேசிய இனப்பிரச்சினை டி. பி. விஜேதுங்க கூறுகின்றார் என்பதற்காக ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாக மாறிவிடப் போவதோ, அன்றி பிரச்சினை தீர்ந்து விடப் போவதோ இல்லை. மாறாக பிரச்சினை என்பதே இல்லை. அதற்குத் தீர்வுத்திட்டம் என்பதே தேவையற்றதொன்று எனக் கூறுவதும், இராணுவத் தீர்விற்காக இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவிப்பதும் பிரச்சினையைத் தீர்க்க உதவப்போவதுமில்லை. மாறாக அதிகரித்துச் செல்லவே வாய்ப்பை ஏற்படுத்தும். இதனை எழுபதுகளின் பிற்பகுதியில் ஆயுதப்போராட்டம் இருந்த நிலையினையும் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் உள்ள நிலையினையையும் ஒப்பிட்டு நோக்குபவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இது பற்றி சுருக்கமாகக் கூறுவதாயின், எண்பதுகளின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் சிறு தொகையாக இருப்பதால் அவர்களை கைது செய்வது கடினமாக இருப்பதாக தெரிவித்த சிறிலங்கா பொலிஸ் அதிகாரிகள் இன்று புலிகள் பெரிய எண்ணிக்கையாக வளர்ந்து விட்டதால் வெற்றி கொள்வது சிரமமாகவுள்ளது எனத் தெரிவிக்கும் நிலையை சுட்டிக்காட்டலாம். இந் நிலையானது சிங்கள அரசியல் வாதிகளின் அணுகுமுறையால் விளைந்ததே ஆகும்.

இந் நிலையில், மீண்டும், மீண்டும் இனவாதப் போக்கே கடைப்பிடிக்கப்படுமானால், சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டது போன்று சிங்களவர்களும்தமிழர்களும் நிரந்தர பகைவர்களாகமாறுவது மட்டுமல்ல, இரண்டு இனங்களும் இணைந்து வாழ முடியும் என்ற கேள்விக்கே இடமில்லாமல் போகும் என்பதோடு, எதிர்காலத்திலும் நிரந்தர பகை நாடுகளாக தொடர்ந்தும் வாழவேண்டிய நிலை உருவாகும் என்பதும் தவிர்க்க முடியாது போகும்.

---

இது தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்குமாறும் எந்த நேரத்திலும் இத் தாக்குதல் நடைபெறக் கூடும் எனவும் பாதுகாப்பு புலனாய்வு மூலம் இது தெரிய வந்ததாகவும், எனவே பொது மக்களை விழிப்பாக செயல்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியற்ற விடுதிகள்

தியான சமயத்தைஎதிர்பார்ப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் இதற்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இவர்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரேமா கொலையின் பின் அரசியல் சூழ்நிலை மாறியது

– ஏ சீ. எஸ் ஹமீத்

(கொழும்பு)

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிய அரசியல் சூழ்நிலை தோன்றியிருப்பதாக வெளியுறவு அமைச்சர் ஏ. சீ. எஸ். ஹமீத் கூறியுள்ளார்.

பாரிசில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரம் ஒன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இந்தக் கொலையின் பயனாக சகல அரசியல் கட்சிகளும் மாற்றங்களைக் கண்டுள்ளன. இந்தச் சூழ்நிலையின் சவால்களை எதிர்நோக்கி வழி நடத்திச் செல்லக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி டி. பி. வீஜேதுங்கவே.

இன்று நாம் காண்கின்ற அரசியல் மாற்றங்களை சில வருடங்களின் முன்னர் எவராலுமே எதிர்வு கூறியிருக்க முடியாது. ஏனென்றால் இந்த மாற்றங்கள் மிகவும் வேகமாகவும் நாடகபாணியிலும் நடைபெற்றிருக்கின்றன. அநுரா பண்டாரநாயக்கா ஐ. தே. கவில் இணைந்துள்ளார். இவ்வாறான ஒரு அரசியல் நடவடிக்கை அரசியல் ஆய்வாளரின் அவதானிப்புமற்றும் கருத்துகளுக்கு அப்பாற்பட்டது ஆகும்.

கோளாகக் கொண்டுள்ளனர் வடக்கு கிழக்குப் பயங்கரவாதம் இருக்கிறதே ஒழிய அங்கு இனவாதம் இல்லை.

மாகாண சபைகளின்கடமை மத்திய அரசாங்கத்தின்கொள்கைகளை அமுல் நடத்துவதே ஆகும். மாகாணசபைகள் கொள்கைகளை உருவாக்கும் நிலையங்கள் அல்ல என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். கொள்கைத்திட்டங்களை உருவாக்குவது மத்திய அரசாங்கமே ஆகும். சில மாகாணசபைகள் எமது கட்சிக்கு கிடைக்காது போனாலும் அரசின் தேசிய கொள்கைக்கு இணங்க செயல்பட வேண்டியது மாகாண சபைகளின் கடமையாகும். மாகாணசபைகள் இருப்பது மத்திய அரசாங்கத்துடன் வழக்கு நடத்துவதற்கு அல்ல மத்திய அரசாங்கமும் பாராளுமன்றமும் கொள்கைகளைத் தயாரிக்கின்றன. அதன்முடிவுகளை இலகுவாக செயல்படுத்தவே மாகாணசபைகள் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

தற்போது ஒன்றாக இருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பை நடத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு

---

(கொழும்பு.

அநுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டமை தொடர்பாக சுதந்திரக்கட்சியில் இருக்கும் அநுராவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்துடன் ஏற்கனவே கருத்து முரண்பாடு கொண்டுள்ள 'ஹெல உறுமய' குழுவைச் சேர்ந்த களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்னா இது பற்றிக் கூறுகையில், சுதந்திரக் கட்சியிலிருந்து தான் உடனடியாக வெளியேறக் காரணம் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டார். பேராசிரியர் கமால் கருணாநாயக்கா இது பற்றித் தெரிவிக்கும் போதுசுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் என்னை நெருக்கடிக்கு உள்ளாக்காத வரையில் தான் கட்சியிலிருந்து வெளியேறப் போவதில்லை எனக் குறிப்பிட்டார். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜினதாஸ நியதபால முதலில் அநுராவுடன் பேச்சு வார்த்தை நடத்துவேன் பின்னர் எனது உணர்வுகளின் அடிப்படையில் முடிவு செய்வேன் எனத் தெரிவித்தார். தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரானஹலீம் இஷாக் சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா விலகியமை துக்ககரமானதே. எனினும் அநுராவுடன் பேசிய பின்னரே தனது டிவு அறிவிக்கப்படும் என்று கூறினார். குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான லயனல் ராஜபக்ஸா கட்சியின் அடுத்த நடவடிக்கைக்காக காத்திருப்பதாகக் கூறினார். அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஸா கூறுகையில், என்ன நிகழ்ந்தாலும் தான் ஒருபோதும் ஐ. தே. கவுடன் சேரப் போவதில்லை எனக் குறிப்பிட்டார். அநுரா ஐ.தே கவில் இணைந்து விட்டார் என்பதற்காக அவருக்கு ஆதரவாகச் செயற்பட்ட அனைவரும் ஐ. தே. க வில் சேர வேண்டும் என்பதில்லை என்று களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

---

ஹஸ்ரத்பால் தர்க்கா முற்றுகை

# உணவு குடிநீர் வசதி செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

சிறீநகரில் ஹஸ்ரத்பால் தர்க்காவினுள் தங்கியிருப்போருக்கு உணவு வசதியும், குடிநீர் வசதியும் செய்து கொடுக்குமாறு மாநில நிர்வாகத்துக்கு புதுடில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆனால் தர்க்காவைச் சுற்றியுள்ள இரும்பு வேலியுள்ள பகுதியிலோ அல்லது அதிகாரிகளுக்கு வசதியாக உள்ள ஒரு பகுதியிலோ வைத்துத்தான் இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த பதினெட்டு தினங்களுக்கும் மேலாக இந்த தர்க்காவினுள் புகுந்து கொண்டிருப்பவர்கள் வெளியே வந்தால் மனிதாபிமான உணர்வுடனும், நியாயமான முறையிலும் நடத்தப்படுவார்கள் என்று மாநில நிர்வாகம் மீண்டும் தெரிவித்துள்ளது.

ஜம்மூகாஷ்மீர் மாநில உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை திருத்தியிருக்கும் புதுடில்லியிலுள்ள உச்சநீதிமன்றத்தின் டிவிஷன்பெஞ்ச் தனது தீர்ப்பில் மேலும் உணவுப் பொருள்களை உள்ளே கொண்டு சென்று விநியோகிக்கலாகாது என்றும் தெரிவித்துள்ளது. ஒவ்வொருவருக்கும் தலா 1200 கலோரி பெறுமானமுள்ள உணவு தரப்படும் இடத்திலேயே சிறிய குழுக்களாக இருந்து உட்கொள்ள அனுமதிக்கப்படலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

# ஆர்ப்பாட்டம், கூட்டம் நடத்த மாஸ்கோ நகரில் தடை விதிப்பு

அக்டோபர் புரட்சியை நினைவுகூரும் முகமாக நவம்பர் ஏழாம் திகதியன்று மாஸ்கோவில் வழமையாக நடைபெறும் பொதுக்கூட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்கு ரஷ்ய அரசு இந்த வருடம் தடை விதித்துள்ளது.

இத் தடை உத்தரவை விதித்த மாஸ்கோ நகர நிர்வாகம் இதுகுறித்து கூறுகையில், அக்டோபரில் அதிபர் பொறிஸ் யெல்ட்சினுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்ட சில குழுக்கள் நவம்பர் 7-ம் திகதியன்று ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டதாகவும், அநாவசிய இரத்தக்களரியை தடுக்கும் வகையிலேயே இத் தடையுத்தரவு விதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தது.

## புதிய அங்கத்துவம்

(வாஷிங்டன்)

ஐ. நா, பாதுகாப்பு சபையில் ஆர்ஜன்டீனா, செக்குடியரசு ஓமான், நவாண்டா ஆகிய நாடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன, 15 நாடுகளை அங்கத்துவமாகக் கொண்ட பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்க இந்த நான்கு நாடுகளும் தெரிவாகின. ஆபிரிக்காவையும் பாதுகாப்பு சபையில் சேர்த்துக் கொள்ள வாக்களிப்பு இடம் பெறும். கேப்வேர்டி, ஹங்கேரி, ஜப்பான், மொரோக்கோ வெனிசுலா ஆகிய நாடுகளின் இடத்திற்கே இந்த புதிய 4நாடுகளும் தெரிவாகின. பிரேசில், டிஜிபோட்டி, நியூசிலாந்து, பாகிஸ்தான், ஸ்பெயின், ஆகிய 5 நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகள் 1994 ஆம் ஆண்டு இறுதிவரை பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும்,

## தபாலில் விரல்

கனடாவில் தனது கைவிரல்களில் ஒன்றை துண்டித்து குவெபெக் சட்டமா அதிபருக்கு தபாலில் அனுப்பிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது-

பழைய காயமொன்றுக்கு நட்டஈடு கோரியிருந்த 56 வயது நபர் ஒருவர் தனது கோரிக்கையை விரைவாக செயற்படுத்தப்படாததினால் தனது கைவிரலை துண்டித்து அனுப்பினார்-

# பாலஸ்தீனிய - இஸ்ரேல் பேச்சுக்களில் முட்டுக்கட்டை

பாலஸ்தீனியர்களுக்குவரையறைக்குட்பட்ட சுயாட்சி வழங்குவது தொடர்பாக இஸ்ரேலிய அரசுக்கும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் சில இடர்பாடுகள் நேரிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறுவது பற்றிய காலவரையறை தொடர்பாகவே இந்தக் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதாகக்கூறப்படுகின்றது.

துருப்புக்களின் வெளியேற்றம் தொடர்பாக இஸ்ரேல் தெரிவித்த யோசனைகளை பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் ஏற்க மறுத்து விட்டதைத் தொடர்ந்தே இந்த முட்டுக்கட்டை நிலை தோன்றியிருக்கிறது. பேச்சு வார்த்தைகள் அடுத்த வாரத்தில் மீண்டும் தொடரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இதேவேளை பேச்சுவார்த்தைகளின் போது சில ஏற்ற இறக்கங்கள் நேரலாம் எனினும் அமைதிக்கான முயற்சிகளில் மக்கள் மனம் தளர்ந்து விடக்கூடாது என்று இஸ்ரேலியப் பிரதமர்யிட்சாக்ராபின் கூறியுள்ளார்.

## அணுக்கழிவு அமிழ்த்தப்படும்

ஜப்பான் கடலில் அணு ஆயுத கழிவுகளை அமிழ்த்தும் வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்என ரஷ்யபசுபிக்சேவை கப்பல் தளபதி அறிவித்துள்ளார். இதனால் ரஷ்யாவின் புகழுக்கு அபகீர்த்தி ஏற்பட்டாலும் பாதகமில்லை. எம் வசமுள்ள 800 சதுரமீட்டர் அணு ஆயுத கழிவுகளை தாம் கடலில் அமிழ்த்த வேண்டியுள்ளது என கப்பல் கப்டன் ஜோஜி குயிரினோவ் தெரிவித்துள்ளார்.

# யுத்த குற்றவாளிகள் விசாரணை மன்றம்

(வாஷிங்டன்)

பதினொரு நீதிபதிகளைக் கொண்ட யூகோஸ்லேவிய ஐ நா யுத்த குற்றவாளிகள் விசாரணை மன்றம் தனது ஆரம்ப கூட்டத்தைஎதிர்வரும் 17ஆம் திகதி ஹேக்கில் நடத்தும்

ஒரு வருடத்திற்கு முன் அமைக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா யுத்த குற்ற ஆணைக்குழு படுகொலை, பலாத்காரம், மான பங்கம் இனத்துடைப்பு போன்ற செயல்களுக்கான சாட்சியங்களை தேடுவதில் ஈடுபட்டுள்ளனர்

# கருணாநிதி ஆதரவாளர்கள் கோபாலசாமி மீது கல்வீச்சு

(சென்னை)

திண்டிவனத்தில் உள்ள அண்ணா சிலைக்கு மலர் மாலை சூட்டச் சென்றவை. கோபாலசாமி தடுத்து நிறுத்தப்பட்டார்

தி.மு.க தலைவர் கருணாநிதியின் ஆதரவாளர்களினாலேயே இவர் மாலை அணிவிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அத்துடன் அங்கு குழுமி நின்ற கருணாநிதியின் ஆதரவாளர்கள் கற்களாலும், குளிர்பான போத்தல்களினாலும் திரு. கோபாலசாமியைத் தாக்கினார்கள்.

மு. கருணாநிதிக்கும் வை. கோபாலசாமிக்கும் இடையேயான பிரச்சினை மோதல் அளவிற்கு முற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

யாழ்

தீப'வின் செய்தியாளர்கள் எழுதிய தமது பயண அனுபவத்தில் குறிப்பிட்டுள்ளனர். 'யாழ்ப்பாணத்தில் உறவைப் புதுபபித்தல்' என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய பயண அனுபவம் விபரிக்கப்பட்டுள்ளது.

திருக்கோணமலையில் தீவுப் பகுதிக்கு செல்லும் நரோமா கப்பலில் ஏறி பயணத்தை ஆரம்பித்தோம். பயணம் தொடர்ந்தபோது இரவு திடீரென பராவெளிச்சங்கள் கடலில் தெரிந்ததில் நாம் அச்சமடைந்தோம். எனினும் இது பின்னர் கடற்படையினர் வழமையாக கப்பல்களை கண்காணிக்க மேற்கொள்ளும் நடவடிக்கை என்பதை அறிந்து கொண்டோம்.

காங்கேசன்வந்து அங்கிருந்து வாதுவ கப்பல்மூலம் பருததித்துறை வந்தடைந்தோம். பருத்தித்துறையில் விடுதலைப் புலிகள் வழங்கிய அனுமதி கடிதங்கள் அனைத்தும் சரியாக இருக்கின்றதா என்று மீண்டும் ஒரு தடவை சரிபார்த்துக்கொண்டோம். பருத்தித்துறை வெளிச்சவீடு போரினால சிதைந்திருந்ததைக் கண்டோம் ஐ. சி. ஆர். சி. கொடியைத் தவிர மற்றவை அனைத்தையும் நோக்கும்போது நாம் புதியவர்கள் போல் நின்றோம். எவ்வளவுக்கு எமது பிணைப்புகள் உடைந்துவிட்டன என்பதை நாம் உணர்ந்துகொண்டோம்

இறங்குதுறையில் எமக்குக் கிடைத்த அமோக வரவேற்பு எமது அச்சங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டது. நாம் இறங்குதுறையிலிருந்து யாழ்ப்பாண மண்மீது கால்எடுத்து வைத்தபோது அரச அதிபரினதும், விடுதலைப்புலிகளினதும் பிரதிநிதிகள் எம்மை வரவேற்றனர்.

நாம் விடுதலைப் புலிகள் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அலுவலகத்தில் விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்ட கடிதத்தைக் காட்டினோம். எமது பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. நாம் வெளிநாட்டவர் என்ற உணர்வு எமமிடையே ஏற்பட்டது. அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு பழைய டொயோட்டா வான் ஒன்றில் பயணம் செய்தோம் நாம் சந்தித்த, கண்ட மக்கள் அனைவரும் நட்பாக பழகினர். பயணம் இனிமையாக இருந்தது.

நகரின் பல பகுதிகள் பாழடைந்திருந்தன கட்டடங்களும், வீடுகளும் தரைமட்டமாக இருந்து மக்கள் வாழ்வதும், பணியாற்றுவதும் குடிசைகளில் கடைகளின் பெயர் பலகைகள் மட்டும் எஞ்சியிருந்தன இடைவழியில் விடுதலைப்புலிகள் சிறுவர்களுக்காக அமைத்திருந்த பூங்காவைக் கண்டோம், சிறுவர்களின் விளையாட்டுப்பலகை கைபிடி பழைய ரி 56 ரக ரைபிள் போன்று வடிவமைக்கப்பட்டிருந்தது, அவர்கள் பதுங்கு குழிகளில் விளையாடுகின்றனர், போரிற்காக கட்டப்பட்ட குகைகளினுள்ளும், குழிகளினுள்ளும் ஒளித்துப்பிடித்து விளையாடுகின்றனர், புலிச்சிலை அவர்களைப் பார்த்தபடி நிற்கிறது.

நாம் கடந்துசென்ற கிராமங்கள் பாழடைந்து காணப்பட்டன, அவை மயானங்கள் போலிருந்தது, ஓரிரண்டு மனிதர்கள் காணப்பட்டனர், நாம் தொடர்ந்து பயணித்தபோது எமது சாரதி பலாலி முகாமின் வானொலி தொடர்பு கோபுரத்தை எமக்கு காட்டினார்.

இராணுவ முகாமருகிலா நாம் இருக்கின்றோம் எனக் கேட்டபோது எமது சாரதி சுப்பிரமணியம் முறிந்த சிங்களத்தில் நீங்கள் சிப்பாய்களுக்கு அஞ்ச வேண்டியதில்லை என்றார், நாம் மிகவும் ஆபத்தான பகுதி எனக் கூறப்பட்ட இடத்தை அடைந்தோம், இந்த மரண வீதியில் ஷெல்கள் பலதடவை ஏவப்படும், எமது வானை புலிகளின் வாகனம் எனக் கருதி இராணுவத்தினர் தாக்குதல் நடத்த ஆரம்பித்துவிடுவரோ என அஞ்சினோம்,

ஷெல் மழையூடாக எம்மை இந்த கட்டுரை எழுதும் அளவுக்கு உயிருடன் கொண்டுவந்தது எமது சாரதியான சுப்பிரமணியத்தின் திறமையே என அச் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்,

---

# காலத்தின் தேவைகள் உணர்ந்து பாடும் கவிஞர்

## "நாளை" வெளியீட்டுவிழாவில் புதுவை

பாரதியாருக்கோ, காசி ஆனந்தனுக்கோ தமிழைப் பாடினார்கள் என்பதனால் மட்டும் பெருமையில்லை. தாம் வாழ்ந்த வாழுகின்ற காலத்தின் தேவைகளை உணர்ந்து அதனைப் பாடினார்கள், அதனால் தான் அவர்களுக்கு பெருமை, அதுபோலவே கவிஞர் நிலா தமிழின்தாசனும் தாம் வாழ்கின்ற காலத்தின் தேவைகளையே முதன்மைப்படுத்தி பாடி வருகிறார். எனவே தான் அவரது நூலுக்கு வெளியீட்டுரை நிகழ்த்துவதையிட்டு நான் நிறைவடைகிறேன்,

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார், நேற்று மாலை கவிஞர் நிலா தமிழின்தாசனின் நாளை கவிதை நூலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் திருக்கோணமலை எனக்குப் புகுந்த வீடு, ஆனால் கவிஞருக்கு அது தான் பிறந்த வீடு, திருக்கோணமலை மண்ணிற்கே ஒரு பெருமை உண்டு. அங்கு ஒரு நாள்வாழ்ந்தால்கூட கவிதை. இன்றைய பசிக்கு உணவு தராமல் ஒதுங்கிவிட்டு நாளை பாயாசம் தருவதால் பயனில்லை, இதனை இந்த மண்ணில் வாழும் எழுத்தாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும், படைப்புக்களை பிரசவித்துவிட்டு பிரசவத்திற்காக காத்திருக்கும் படைப்பாளிகள் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடன் தொடர்பு கொள்து பயன்கரலாம் எனவும் அவர் தெரிவித்தார்,

''நாளை'' நூலின் முதற்பிரதியை அரசியற்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த தங்கன் அவர்களிடமிருந்து தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன் பெற்றுக்கொள்ள நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின்பொறுப்பாளர் ந, இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவை திருமலை தொடர்பக பொறுப்பாளர் மூர்த்தி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் சி ரவி வரவேற்புரை நிகழ்த்தினார், யாழ், பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ, முருகையனின் சிறப்புரையும், பலாலி ஆசிரியர் பயிற்சிக கலாசாலை விரிவுரையாளர் கோ, பத்மநாதனின் மதிப்பீட்டுரையும் இடம் பெற்றது,

இந்த இலக்கியம் தமிழுக்கு வளம் சேர்க்கும் ஒரு கவிதைத் தொகுதியாகும் எனினும் அவர் எடுத்துக்கொண்டகருப்பொருள் இன்றைய சமகாலத்தின் தேவையாகும் என்று பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில்குறிப்பிட்டார் நூலாசிரியரின் பதிலுரை மற்றும் நன்றியுரையுடன் வைபவம் நிறைவெய்தியது.

---

அஞ்சலட்டை

வைப்பதை பெலியத்தையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்த ராஜபக்ஷ, பெலியத்தையில் மேலும் 7,000 பேர் கையெழுத்திட்டுள்ளார்கள் என்றார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மக்கள் நலச்சேவைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டு, உர வகைகளின் விலையேற்றம், வடக்கு கிழக்

---

கிட்டு

தெரிவிக்கப்பட்டுள்ளது எண்ணெய் நிலவாயு கமிஷன் இந்திய கடற்படை என்பவற்றின் உதவியுடன் இந்தக்கப்பல் மூழ்கிக் கிடக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டு நீரினடியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன இக் கப்பலின் புகைப்படங்களும் எடுக்கப்பட்டதாகவும் இதன் மூலம் இக் கப்பல் குறித்த முக்கிய சான்றுகள் கிடைத்துள்ளதாகவும் சிறப்பு புலனாய்வு துறை கூறியுள்ளது.

கடந்த ஜனவரியில் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு பயணம் செய்த எம், வி அகத் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டதும் இதைத் தொடர்ந்து கேணல் கிட்டுவும் ஏனைய ஒன்பது போராளிகளும் கப்பலை தகர்த்து வீரச்சாவு அடைந்ததும் தெரிந்ததே.

---

பொலிஸ்மா

கப்பட்டமையும் தெரிந்ததே.

ஜனாதிபதி டி பி. வீஜேதுங்கவிற்கு ஏனையவர்கள் தொடர்பாக சந்தேகம் இருப்பினாலும் தேர்தல் காலத்தில் உடுகம்பொலவின் ஒத்து

---

# குடும்பசுகாதாரசேவையாளர் தெரிவுநேர்முகப்பரீட்சை

கிராமிய சுகாதார உதவியாளர்களைபயிலுனர் குடும்ப சுகாதார சேவையாளர்களாக தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19-ம் திகதி காலை 8.30 மணிக்கு சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப்பரீட்சைக்கு தெரிவானோர் அன்றைய தினம் பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை கல்விச்சான்றிதழ், கிராமசேவகர் சான்றிதழ், நிறுவனத் தலைவரின் நற்சான்றிதழ், அனுபவ சான்றிதழ் ஆகியவற்றின் மூலப்பிரதிகளுடனும் நிழற்பட பிரதிகளுடனும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ச,சி]

---

# உதைபந்தாட்ட போட்டி

வலிமேற்கு உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கிடையேயான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகளாக மாதகல் சென் தோமஸ் அணியை எதிர்த்து அராலி ஏ.எல் அணியும் தெல்லிப்பழைகிறாஸ்கொப்பஸ் அணியை எதிர்த்து சில்வஸ்ரார் அணியும் விளையாடவுள்ளன போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்த வரோதயா கல்லூரியில் ஆரம்பமாகும்

# பயணி மரணம்

(தென்மராட்சி)

நேற்று அதிகாலை ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி பயணம் செய்து கிளாலிக் கடல்கரையை வந்தடைந்த ஒரு வயோதிபர் திடீரென நிலத்தில் விழுந்து மரணமானார்.

கரவெட்டி கரணவாயைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை(வயது68 என்பவரே இவ்வாறு மரணமானவராவார் இவரது உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டபோது உறவினரால் அடையாளம் காணப்பட்டது. [86]

# 10 பேர் கைது

(கொழும்பு)

கடமையிலிருந்து ஒடிய பத்து ஊர்காவலர் படையினரை அநுராதபுரப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்கள் பரசங்கவேவ மற்றும் கொலிபண்டவேவ காவல் நிலையங்களில் கடமையில் ஈடுபடாமல் கடமைப் பதிவேட்டில் கையொப்பம் வைத்துவிட்டுக் கடமை புரியாமல் நழுவி விட்டதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# மேசைப்பந்து

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் மாணவர்களுக்கான மேசைப் பந்துப் போட்டி நாளை சுண்டிக்குளி வை எம் சி ஏ உள் விளையாட்டரங்கில் காலை 8 மணி முதல் நடைபெறும் இம்மாவட்ட இறுதி நிலைப் போட்டிகளில்கோட்ட மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பங்கு பற்றுவார்கள்.

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. ப. மு நாகராசா

[சரவணை]

சரவணையூரைச் சேர்ந்தவரும் முன்னாள் கண்டி பிரபல வர்த்தகரும், மன்னார் உயிலங்குளம்' ஆனந்தா ஸ்ரோர்ஸ்' உரிமையாளரும் ஆகிய திரு. ப மு. நாகராசா அவர்கள் 03-11 93 புதன்கிழமை (நேற்று) சிவபதமடைந்துவிட்டார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் கனகராசா (ஆனந்தா ஸ்ரோர்ஸ், உயிலங்குளம்), வரதராசா (கனடா), திருமதி க. புஸ்பராணி, திருமதி அ. யோகராணி, திருமதி யோ. செல்வராணி (ஆசிரியை உயிலங்குளம் றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின்அருமைத் தந்தையாரும், திருமதி க. மகாலட்சுமி, திருமதி வ. புஸ்பமலர் (கனடா), திரு ச. கனகராஜா (ஓய்வு பெற்ற உதவிக்கணக்காளர், துறைமுக

---


தமிழீழ காவல்துறை

பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித்தகைமைகள்: 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை.

உயரம்:- 5' 6”

மற்றவை அனைத்தையும் நோக்கும்போது நாம் புதியவர்கள் போல் நின்றோம். எவ்வளவுக்கு எமது பிணைப்புகள் உடைந்துவிட்டன என்பதை நாம் உணர்ந்துகொண்டோம்.

இறங்குதுறையில் எமக்குக் அமைக்கதிருந்த பூங்காவைக் கண்டோம். சிறுவர்களின் விளையாட்டுப் பலகை கைபிடி பழைய ரி 56 ரக ரைபிள் போன்று வடிவமைக்கப்பட்டிருந்தது. அவர்கள் பதுங்கு குழிகளில் விளையாடுகின்றனர்.

[...]ஊடாக எம்மை இந்த கட்டுரை எழுதும் அளவுக்கு உயிருடன் கொண்டுவந்தது எமது சாரதியான சுப்பிரமணியத்தின் திறமையே என அச் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

[...]பீடகத்துடன் தொடர்பு கொள்து பயன்கரலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

''நாளை'' நூலின் முதற்பிரதியை அரசியற்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த தங்கன் அவர்களிடமிருந்து தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன் பெற்றுக்கொள்ள நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மாணவர்

[...]சிறப்பு புலனாய்வு துறை கூறியுள்ளது.

கடந்த ஜனவரியில் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு பயணம் செய்த எம். வி அகத் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டதும் இதைத் தொடர்ந்து கேணல் கிட்டுவும் ஏனைய ஒன்பது போராளிகளும் கப்பலை தகர்த்து வீரச்சாவு அடைந்ததும் தெரிந்ததே.

அஞ்சலட்டை

வைப்பதை பெலியத்தையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்த ராஜபக்ஷ, பெலியத்தையில் மேலும் 7,000 பேர் கையெழுத்திட்டுள்ளார்கள் என்றார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மக்கள் நலச்சேவைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் வெட்டு, உர வகைகளின் விலையேற்றம், வடக்கு கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியமை ஆகியவற்றைக் கண்டித்தே இந்த அஞ்சலட்டைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா

கப்பட்டமையும் தெரிந்ததே.

ஜனாதிபதி டி பி. விஜேதுங்கவிற்கு ஏனையவர்கள் தொடர்பாக சந்தேகம் இருப்பினாலும் தேர்தல் காலத்தில் உடுகம்பொலவின் ஒத்துழைப்பு தேவைஎன்பதனாலும் இவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க டி. பி விஜேதுங்க விரும்புவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

[86] பற்றுவார்கள்.

---


## தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

## உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித்தகைமைகள்: 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை.

உயரம்:- 5' 6"

வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 04-11-93ஆம் திகதி தொடக்கம் 20-11-93 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்குச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

03 - 11 - 93

(சி 7845)


---


**விவசாயிகளே!**

**தொழிற்சாலை உரிமையாளர்களே!**

**இயந்திரப் பாவனையாளர்களே!**

**உங்கள்**

**பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான**

**குறைந்த செலவில் புதிய மாற்றீடு.**

# ?

**நாளைய தினசரியில்**

[சி 7837]


---


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


---

யா/ சேர். வை. து மந்திய மகா வித்தியாலயம்
வேலணை

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் 1993

இடம்: மேற்படி பாடசாலை 70/20, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 06 11-1993 சனிக்கிழமை காலை9மணி

பழைய மாணவர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம்.

சு. கலாதரன் — தலைவர்
கா. பாலகிருஷ்ணன் — செயலர்

[6480]

---

## பிற்போடப்பட்டுள்ளது

சுதுமலை ஐங்கரன் ச.ச. நிலையம் சிறுவர் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக இன்று 04.11.93ல் நடைபெறஉள்ள நாடக நிகழ்ச்சி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகிகள்.

(6477)

---

## நன்றி நவிலல்

எமது அன்னை திருமதி கந்தையா-அன்னம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், 03-11 93 அன்று நடைபெற்ற மரணச்சடங்கிலும் இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

'அன்னை இல்லம்'
24/2, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

மக்கள்

(6476)

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. ப. மு நாகராசா

[சரவணை]

சரவணையூரைச் சேர்ந்தவரும் முன்னாள் கண்டி பிரபல வர்த்தகரும், மன்னார் உயிலங்குளம்' ஆனந்தா ஸ்ரோர்ஸ்' உரிமையாளரும் ஆகிய திரு. ப மு. நாகராசா அவர்கள் 03-11 93 புதன்கிழமை (நேற்று) சிவபதமடைந்துவிட்டார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் கனகராசா (ஆனந்தா ஸ்ரோர்ஸ், உயிலங்குளம்), வரதராசா (கனடா), திருமதி க. புஸ்பராணி, திருமதி அ. யோகராணி, திருமதி யோ. செல்வராணி (ஆசிரியை உயிலங்குளம் றோ. க. த. க. பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், திருமதி க. மகாலட்சுமி, திருமதி வ. புஸ்பமலர் (கனடா), திரு ச. கனகராஜா (ஓய்வு பெற்ற உதவிக்கணக்காளர், துறைமுக அதிகாரசபை திருகோணமலை), திரு. கா. அருளானந்தன் (கனடா), திரு கா. யோகராஜா (உரிமையாளர், டினேஸ் அரிசி ஆலை, உயிலங்குளம், மன்னார்) ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி சிவக்கொழுந்து, திருமதி நாகம்மா, திரு ப. மு சுப்ரமணியம் மற்றும் திருமதி இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான திரு. நா. மயில்வாகனம், திருமதி பூங்காவனம் செல்லையா, மற்றும் திருமதி கமலாம்பிகை, தம்பையா, ஆகியோரின் மைத்துனரும், பரணீதரன், காயத்திரி, ஜெயகாந்தன் (சிந்மயபாரதி வித்தியாலயம், சுதுமலை ), சுரேஸ்குமார் (கனடா), ஷோபனா (கனடா), சிவகுமாரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), நந்தகுமாரன் (யாழ். மருத்துவபீடம் 2-ம் வருடம்), விஜிதா, கஜரூபன் (யாழ். இந்துக்கல்லூரி), கோகுலன் (புனித ஜோன்பொஸ்கோ), கோபிகா (கார்மேல் சிறுவர் பாடசாலை), தனஞ்சயன், தர்ஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 04--11-93 (இன்று) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இல. 9 கலட்டி அம்மன் வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

தகவல்:
மு. நா. கனகராசா
(மகன்)

9, கலட்டி அம்மன் வீதி.
யாழ்ப்பாணம்.

[6479]

---

## திரு. வேலாயுதம் பாலசுப்பிரமணியம்

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலாயுதம் பாலசுப்பிரமணியம் (3-11-93) (புதன்கிழமை) நேற்று காலமாகிவிட்டார். அன்னார் மாணிக்கம் (ஆசிரியை இருபாலை கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை அவர்களின் அன்புக்கணவரும், பவானந்தி (யாழ். பல்கலைக் கழகம்), பவதாரணி (உதவி அரசாங்க அதிபர் பணிமனை யாழ்ப்பாணம்), கிருபாகரன் (தொழில் நுட்பக் கல்லூரி )ஆகியோரின் அருமைத் தந்தையும். வேலாயுதம் பத்மநாதன் (கிச்சி உரும்பராய்) அவர்களின் அருமைச் சகோதரரும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் (4-11 93) இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 12 மணிக்கு இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

பழம் றோட்,
இருபாலை,
கோப்பாய் தெற்கு

(6481)